மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# தமிழ் இலக்கிய விழுமியங்களும் மானிட வாழ்வியலும்

## Tamil Literary values and human life

இரா. பன்னிருகைவடிவேலன்/ R. Pannirukaivadivelan[1]
[1] Associate Professor, Department of Tamil,
Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS)
Corresponding Email: pannirukai.sl@velsuniv.ac.in

**ஆய்வுச்சாரம்**

இலக்கியம் என்பது மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாதது; கருத்துப் பெட்டகமாக விளங்குவது; மனித மனத்திற்கு இன்பம் நல்குவதாய், தக்க வடிவத்தில் அமைவது; படைப்பாளன் தன் உணர்ச்சிக்கும் கருத்துக்கும் வடிவம் கொடுத்து முறைப்படுத்தி வழங்குவது; எழுத்துப்பூர்வமான ஆவணமாகத் திகழ்வது; கற்பனை நயத்தோடு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தையும் சுமந்து வருவது; நாட்டின் மரபுவழிச் செல்வமாகக் கருதப்படுவது; மனித உள்ளுணர்வுகளை அழகுபடுத்தி மொழியால் வெளிக்கொணர்வது; சமுதாயத்தின் ஒட்டுமொத்த அனுபவ வெளிப்பாடு; சமுதாயத்தை மதிப்பிடும் ஓர் அளவுகோல். மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களில் உள்ள வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**கருச்சொற்கள்:** இலக்கியம், வாழ்வியல் விழுமியங்கள், பண்பாட்டுக் கருவூலம், மரபுவழி

**Abstract**

Literature is Art, Imagination, and Pleasure. Working through the medium of language. It is an essential place for the establishment of language, and the experience and art of capturing the feelings and truths of human life. Assessing people's life values. One can come to the view that the creator proposes a goal for the society and is interpreted as a transcendental statement that expresses the meaning of life without being empty. Literature cannot be defined very precisely. To give pleasure to the human mind, to be in proper form. The creator gives shape to his emotions and ideas. Being a written document. Carrying the cultural treasure of certain people with imagination. Considered as heritage wealth of the country. The aim of this paper is to examine the values of life in Sangam literature based on the above concepts.

**Keywords:** Sangam literature, human, Art, language

**முன்னுரை**

இலக்கியம் என்பது மிகத் துல்லியமாக வரையறை செய்ய இயலாதது; கருத்துப் பெட்டகமாக விளங்குவது; மனித மனத்திற்கு இன்பம் நல்குவதாய், தக்க வடிவத்தில் அமைவது; படைப்பாளன் தன் உணர்ச்சிக்கும் கருத்துக்கும் வடிவம் கொடுத்து முறைப்படுத்தி வழங்குவது; எழுத்துப்பூர்வமான ஆவணமாகத் திகழ்வது; கற்பனை நயத்தோடு குறிப்பிட்ட மக்களின் பண்பாட்டுக் கருவூலத்தையும் சுமந்து வருவது; நாட்டின் மரபுவழிச் செல்வமாகக் கருதப்படுவது; மனித உள்ளுணர்வுகளை அழகுபடுத்தி மொழியால் வெளிக்கொணர்வது; சமுதாயத்தின் ஒட்டுமொத்த அனுபவ வெளிப்பாடு; சமுதாயத்தை மதிப்பிடும் ஓர் அளவுகோல் என்பது பெறப்படுகிறது. மேற்கண்ட கருத்துகளின் அடிப்படையில் சங்க இலக்கியங்களிலும் நீதி இலக்கியங்களிலும் உள்ள வாழ்வியல் விழுமியங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இலக்கியமும் மனித விழுமியங்களும்**

மனித விழுமியங்களை வளர்ப்பதும், பேணுவதும் இலக்கியம் எனப்படும். இலக்கியம் மனிதனது வாழ்வியலைச் சொல்வதும், புடம் போடுவதும் ஆகும். இலக்கியம் என்பது கலை, கற்பனை, இன்பம் உடையதாகத் திகழ்வது; மொழி எனும் ஊடகத்தினூடே இயங்குவது; மொழி நிலைபெற இன்றியமையா இடம் வகித்தும், மனித வாழ்வின் உணர்வுகளையும் உண்மைகளையும் அனுபவப் பூர்வமாகக் கலை நுட்பத்தோடு எடுத்தியம்புவது; அறச்சிந்தனைகளை வலியுறுத்துவது; மக்களின் வாழ்வியல் விழுமியங்களை மதிப்பிடுவது; நனிநுட்பம் வாய்ந்ததாகவும், இயற்கை அழகைப் படம்பிடித்துக் காட்டுவதாகவும் அமைவது; இலக்கியம் என்பது மனித வாழ்க்கையை மையமாகக் கொண்டு, உணர்வு சார்ந்து அமைவதால்தான், நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. இலக்கியம் மனித விழுமியங்களைக் கட்டி எழுப்புவதற்காகப் படைக்கப்பட வேண்டும் என்று அறுதியிட்டுக் கூறலாம்.

மக்களிடம் கற்று, மக்களுக்கே வழங்கும் மக்கள் இலக்கியம், அதாவது மக்களின் எதார்த்த வாழ்வியலை மக்களின் அன்றாட நடைமுறை வாழ்க்கையில் இருந்து கற்று, எதிர்காலச் சந்ததியினருக்கு வாழ்வியலைக் கற்பிக்கும் பாடநூலாக அமைகின்ற இலக்கியம்தான் மக்கள் இலக்கியம் எனக் குறிப்பிடப்படும் தலைசிறந்த இலக்கியக் கூறாகும்.

இலக்கிய வடிவங்கள் நமது மொழியில் வாழ்வியலைக் கற்பிக்கும் ஓர் ஊடக சாதனமாகவே அமைந்துள்ளது. அந்த வகையில் நமது தமிழ்மொழியில் இருந்த இலக்கிய வடிவம் கவிதை என்னும் செய்யுள் உருவமாகவே இருந்தது.

பழந்தமிழ் இலக்கியங்களைத் தேடிப்பெற்று வாசித்தாலே பண்டைத் தமிழர் மாண்பு வாழ்வியல் பரிணாமங்களைத் தரிசிக்க முடியும். மனித வாழ்வியலில் பல்வேறு பரிணாமங்களைக் கண்டு கடந்து சென்று கொண்டிருக்கின்றன காலங்களும் நேரங்களும். அதனூடாகப் பல நூற்றாண்டு கடந்து செல்லும் மனித வாழ்வியலில் விழுமியங்களை எதிர்காலச் சந்ததிகள் தரிசிக்கக் கூடியதாக இருக்கும் ஓர் ஊடக வடிவமே இலக்கியம்.

இயற்கையோடு இயைந்து வாழ்கின்ற நீலகிரிப் படகர் இன மக்களின் வாழ்வியல் வழக்காறுகள் அவர்தம் இயற்கைப் புரிதல், வாழ்வியல் விழுமியங்கள், பண்பாடு மற்றும் கலாச்சாரப் பரிணாம நிலை போன்றவற்றிற்கான சிறந்த ஆவணங்களாகும். பஞ்சபூதங்களையும், மரம், கல், ஞாயிறு, நிலவு, பிறை போன்ற பல்வேறு இயற்கைக் கூறுகளையும் வழிபடுகின்ற படகர்கள் காற்றினையும் வணங்குகின்றனர். காற்றினைக் 'காயி' என்று அழைக்கும் இவர்கள், காற்றுச் சார்ந்த பல வாழ்வியல் வழக்காறுகளைக் கட்டமைத்து அதனை இன்றளவும் கடைப்பிடித்து வருகின்றனர். இவ்வாறு இலக்கியங்கள் மனித வாழ்வியல் விழுமியங்களைக் காட்டுவனவாக அமைகின்றன.

**நற்றிணையில் புறவிழுமியங்கள்**

விழுமியம் என்ற சொல்லிற்குத் தமிழ் இலக்கண இலக்கியங்கள் யாவும் பெரும்பான்மையும் உயர்ந்த, சிறந்த, மேலான என்னும் பொருளைத் தருகின்றன. தலைவன், தலைவி, தோழி, பாங்கன், செவிலி, நற்றாய் ஆகிய மாந்தர்களின் வழி சமூகத்திற்குக் கிடைத்த புறவிழுமியங்கள் விளக்கப்படவுள்ளன. அரசன் ஆட்சி செய்தல், வள்ளலின் கொடைத்திறம், மனித நேயம், அஃறிணை உயிரைத் தன் உயிராகக் கருதுதல், குலம் பார்க்காமை, சமயம், நம்பி வந்தவரைக் கைவிடாதிருத்தல், எடுத்தச் செயலைச் செவ்வனே செய்தல், தேவையற்று உயிர் நீங்குதல் தவறு ஆகிய புறவிழுமியங்களை நற்றினையில் காணமுடிகிறது.

நற்றிணைப் பாடல்கள் அகப்பாடல்களாக இருப்பினும் அவற்றில் புறத்தின் கூறுகளாக மன்னர்கள், வள்ளல்கள், வீரர்கள் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. அவர்கள் தம் நாட்டு மக்களுக்காக எதிரி நாட்டுடன் போர் புரிந்து பொன், பொருள் எனப் பல பொருள்களைக் கைப்பற்றி வறியவர்களுக்குக் கொடையாகக் கொடுத்துத் தம் நாட்டையும் தம் மக்களையும் செழுமையுடனும் சீரும் சிறப்புடனும் வைத்திருந்தார்கள் என்பதைப் பாடல்களின்வழி அறியமுடிகிறது.

தித்தன் என்னும் சோழ மன்னன் உறையூரை ஆட்சி செய்தான் என்பது "வீரை வேண்மான் வெளியன் தித்தன்" (நற்.58) என்னும் பாடலடி விளக்குவதைப் பார்க்க முடிகிறது. மேலும்,

எழுது எழில் சிதைய அமுத கண்ணே
தேர் வண் சோழர் குடந்தைவாயில்" (நற்.379)

என்ற பாடலடி தலைவியின் கண்களுக்குச் சோழனின் குடைவாயிலில் உள்ள ஊரில் இருக்கின்ற நீல மலரை ஒப்பிட்டுக் காட்டியுள்ளனர். அது மட்டுமன்றி, தலைவியின் கைகள் சிவந்திருத்தலைப் பாண்டிய மன்னனின் பொதியலில் பூத்த காந்தள் மலரைப் போன்று சிவந்தன என,

மாரி அம் கிடங்கின் ஈரிய மலர்ந்த
பெயல் உறு நீலம் போன்றன; விரலே (நற்.379)

என்ற பாடலடிகள் விளக்குகின்றன. சோழன் ஒலிக்கின்ற மணியையுடைய யானையையும் பசிய பொன்னாலாகிய பூண்களையும் கொண்டவர் என்று “படுமணி யானைப் பசும்பூட் சோழர்” (நற்.227) என்னும் பாடலடி விளக்குகின்றது. இப்பாடல்களின் வழி மன்னர்கள் சங்க காலத்தை ஆண்டு வந்தனர் என்றும் அவர்கள் செல்வச் செழிப்புடன் நாட்டை வளர்த்தும் வந்தார்கள் என்றும் தெரிய வருகிறது.

**சங்க இலக்கியம் காட்டும் வணிக விழுமியங்கள்**

திரைக்கடல் ஓடியும் திரவியம் தேடு என்பது தமிழில் வழங்கும் ஒரு பழமொழி. பழமொழிகள் ஒவ்வொன்றும் பழமையான மொழிகள் மட்டுமல்ல, அவை ஒவ்வொன்றும் அனுபவ மொழிகள். வாழ்க்கை அனுபவங்களால் ஆனவை. அனுபவங்கள்தான் வாழ்க்கையை அர்த்தப்படுத்துகின்றன. பொருள் நிறைந்ததாய் மாற்றுகின்றன. வாழ்க்கை பொருளால் ஆனது. பொருள் நிறைந்தது. மனித இனக்குழு சமூகமாக வாழ்ந்தபோது தன்னிடமுள்ள பொருளைக் கொடுத்துவிட்டுத் தனக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொண்டான். இவற்றின் வளர்ச்சி பண்டமாற்று வணிகமாகப் பரிணமித்தது. அதுவே பின்னர் நாணயமுறை வணிகமாக வளர்ச்சியடைந்தது. அந்த வணிகத்தைச் செய்வதற்குத்தான், திரைக்கடல்வழி ஓடியிருக்கின்றனர்.

ஒரு நாட்டின் சிறந்த தொழில்களாக உழவுத் தொழிலையும் வணிகத் தொழிலையும் கூறலாம். நாடு செழிப்புடன் இருக்க வேண்டுமானால் இவ்விரண்டு தொழில்களும் செழிப்புற்று இருக்க வேண்டும். செழிப்புற்றிருந்த காரணத்தால்தான் சங்ககாலம், பொற்காலம் என்று சங்க இலக்கியங்கள் போற்றுகின்றன.

மக்கள் உயிர் வாழ்வதற்குரிய இன்றியமையாதவை உணவு. தொழில்களுக்கெல்லாம் உயிர்நாடியானது உழவுத் தொழில். உழுவார் மற்ற தொழிலாளர்களுக்கெல்லாம் அச்சாணி. உலகத்திற்கே உழவன்தான் ஆணி ஆகிறான். பசிவந்திடப் பத்தும் பறந்து போய்விடும். இந்தக் கொடுமையிலிருந்து, உறுபசியிலிருந்து மக்களைக் காப்பாற்றுவது உழவுத் தொழிலே ஆகும். ‘பொருபடை தரூஉம் கொற்றமும் உழவர் ஊன்றுகால் மருங்கின் ஈன்றதன் பயனே’ எனப் புறநானூறு கூறுவதால் மன்னனது வெற்றிக்கும் புகழுக்கும் உழவர்கள் காரணமாவர். மன்னர்கள் ஏரி, குளம், வாய்க்கால்களை வெட்டி உழவுத் தொழிலை வளப்படுத்தினர். கரிகாலன் காடு கொன்று நாடாக்கிக் குளம் தொட்டு வளம் பெருக்கினான். குடபுலவியனார் என்னும் சான்றோர்,

> நீரின்ற மையா யாக்கை யெல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே
> உணவெனப் படுவது நிலத்தொடு நீரே (புறநானூறு - 77)

என உழவுத் தொழிலின் மேன்மையினையும், அதனைப் பெருக்கும் வழியினையும் பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு எடுத்துரைக்கிறார்.

சங்க காலத்தில் உள்ளூர் அளவில் நடைபெற்ற வணிகங்களில் பண்டமாற்றுமுறை வணிகமே பெரும்பான்மையாக நடைபெற்று வந்திருக்கின்றது. இதனை,

கான் உறை வாழ்க்கை கதநாய் வேட்டுவன்
மான்தசை சொரிந்த வட்டியும் ஆய் மகள்
தயிர் கொடு வந்த தசும்பும் நிறைய
ஏரின் வாழ்நர் பேரில் அரிவையர்
குளக்கீழ் விளைந்த களக்கொள் வெண்ணெல்
முகத்தனர் கொடுப்ப உகந்தனர் பெயரும் (புறநானூறு – 33)

என்கிற புறநானூற்று அடிகள் எடுத்துக்காட்டுகின்றன. இப்பாடலில் காட்டில் வாழும் வாழ்க்கையினை உடையவன் வேடன். சினம் மிகுந்த நாயுடன் அவன் வருவான். மான்கறியினை வட்டிலிலே கொண்டு வருவான்.

ஆயர் பாடியிலே இருக்கிற ஆயர் மகள் பானையிலே தயிரைக் கொண்டு வருவாள். அதற்குப் பதிலாக அவர்கள் நெல்லை முகந்து முகந்து அவ்வட்டிலும் பானையும் நிறையுமாறு கொடுப்பார்கள். அவர்களும் அதைப் பெற்று மகிழ்ச்சியோடு செல்வார்கள் என்பதுதான் இந்தப் பாடலின் பொருள். இதன் மூலம் சங்க காலத்தில் இறைச்சியினையும் தயிரையும் கொடுத்து நெல்லினைப் பண்டமாற்றாகப் பெற்றிருப்பதை அறியலாம்.

சங்க காலத்தில் வாழ்ந்த தமிழர்கள் அயல்நாட்டினரோடு கொண்டிருந்த தொடர்பைப் பட்டினப்பாலை என்னும் பத்துப்பாட்டு இலக்கியம் மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

மொழி பல பெருகிய பழிதீர்தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினிது உறையும்
முட்டாச் சிறப்பின் பட்டினம். (பட்டினப். 213-218)

என்னும் பாடல் வரிகளில் இதனை அறியலாம்.

அரிசி, இஞ்சி, தோகை முதலிய தமிழ்ச்சொற்கள் 'ஈப்ரு' முதலிய மொழிகளில் இடம் பெற்றிருக்கின்றன. தமிழக வணிகர்கள் மிளகு வியாபாரத்தில் ஈட்டிய பெருஞ்செல்வத்தைப் பற்றியும், ரோமாபுரிக்கும் தமிழகத்திற்கும் உள்ள தொடர்பை 'பெரிபுளுசு', 'பிளினி' போன்றோர் ஆய்வில் குறிப்பிட்டுள்ளனர்.

பிற நாட்டிலிருந்து பலமொழிகள் பேசக் கூடியவர்களும் தமிழகத்திற்கு வந்து இங்குள்ளவர்களிடம் ஒன்றாகக் கலந்து இனிதாக வாழும் நகரமாகக் காவிரிப்பூம்பட்டினம் விளங்கியிருக்கின்றது. பிறநாட்டிலிருந்து வந்து தமிழகத்தில் வாழ்ந்தவர்களைச் சங்க இலக்கியம் யவனர்கள் என்றும் மிலேச்சர் என்றும் குறிப்பிடுகின்றது. இதனை முல்லைப்பாட்டு என்கிற இலக்கியம் எடுத்துக்காட்டுகின்றது. வணிகம் சிறந்த புகார் நகரத்திலே சிறந்த வணிகர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். அவர்களின் சிறப்பினை,

கொள்வதூஉம் மிகை கொளாது
பல் பண்டம் பகர்ந்து வீசும்
தொல் கொண்டித் துவன்று இருக்கை (பட்டினப். 210-213)

என்று கருத்தாழமிக்க வரிகளில் பாடியிருக்கிறார் கடியலூர் உருத்திரங்கண்ணனார்.

வணிகர்கள், நீண்ட நுகத்தடியில் தைத்திருக்கும் நடு ஆணி போல் நடுவு நிலைமையோடு வாழும் நல்நெஞ்சத்தை உடையவர்கள். பழிக்கு அஞ்சி உண்மையே பேசுவார்கள். தம்முடைய பொருளையும், பிறருடைய பொருளையும் ஒரு தன்மையாகவே எண்ணுபவர்கள். பொருளை வாங்குவோரிடம் அளவுக்கு மேல் அதிகமாக வாங்கமாட்டார்கள்.

தாங்கள் கொடுக்கும் பண்டத்தையும் குறைத்துக் கொடுக்காமல் வணிகம் செய்பவர்கள் எனப் பட்டினப்பாலை கூறுவதிலிருந்து அக்கால வணிகர்களின் வணிக விழுமியத்தினை அறிய முடிகின்றது.

**புறநானூறு காட்டும் பல்வேறு விழுமியங்கள்**

பண்டைத் தமிழ்நாட்டில் தமிழ்ப் பெருங்குடி மக்கள் நாகரிகச் சிறப்பிலும், பண்பாட்டு மேன்மையிலும் மிகச் சிறந்து விளங்கினார்கள் என்பதைப் புறநானூற்றினால் அறிய முடிகிறது.

உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே (புறநானூறு. 183)

எனக் கல்வியின் மேன்மை குறிப்பிடப் பெறுகின்றது. கீழ்க்குலத்தில் பிறந்தவனாக இருந்தாலும் அவன் கல்வி கற்றால் உயர்ந்தவனாகின்றான். இச்செய்தியினை,

வேற்றுமை தெரிந்த நாற்பாலுள்ள
கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
மேற்பால் ஒருவனும் அவன்கட்படுமே (புறநானூறு 183)

எனக் குறிக்கின்றது. புறநானூறு சிறந்த வரலாற்றுச் செய்திகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

சமூக வளர்ச்சிக்கு இல்லற வாழ்க்கையில் நாட்டம் இன்றியமையாகும். துறவறத்தை விட இல்லறம் இனிதெனக் கண்டான் தமிழன். அவன் குழந்தைகளை ஆண் - பெண் பேதம் பார்த்து அன்பு செலுத்தியதில்லை. பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தையை அருகில் வைத்தால் இன்பம் வேறு எவ்வுலகிலேதான் கிட்டும்? ஒருவனுக்கு எத்தகைய செல்வம் இருந்தாலும் மக்கட் செல்வம் இல்லாது போனால், இவ்வுலகில் இன்பமும் இல்லை வாழ்க்கையும் இல்லை என எடுத்துரைக்கிறது புறநானூற்றுப் பாடல் ஒன்று.

படைப்புபல படைத்துப் பலரோ டுண்ணும்
உடைப்பெருஞ் செல்வ ராயினும் கிடைப்படக்
குறுகுறு நடந்து சிறுகை நீட்டி
இட்டுந் தொட்டுங் கல்வியுந் துழந்தும்
நெய்யுடை யடிசில் மெய்பட விதிர்த்தும்
மயக்குறு மக்களை யில்லோர்க்குப்
பயக்குறை யில்லைதாம் வாழு நாளே (புறநானூறு - 178)

கணவனுக்கும் மனைவிக்கும் இடையே காதலையும் குடும்பப் பிணைப்பையும் ஏற்படுத்த வல்லவை குழந்தைகள். குழந்தையின் பேச்சு மதியை மயக்கச் செய்யும் ஆற்றலுள்ளவை. குழந்தையின் பேச்சில் கோடியின்பம் காண்பர் பெற்றோர். மழலை மொழியிலே மனம் திளைத்தவர் யாழையும் விரும்பமாட்டார்.

யாழொடு கொள்ளா பொழுதொடும் புணரா
பொருளறி வாரா வாயினுந் தந்தையர்க்
கள்வந் தனவாற் புதல்வர்தம் மழலை (புறநானூறு - 92)

என்கிறது ஔவையாரின் பாடல் ஒன்று. நல்ல குழந்தைகளைப் பெற வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும்.

தமிழர் தம் பண்பட்ட வாழ்வில் மருத்துவத்துறை இருந்ததையும், துறையில் பெயர் போன சான்றோர்கள் பலர் இருந்தனர் என்பதற்கும் 'மருத்துவன் தாமோதரனார்' என்ற பெயரே சான்றாகத் திகழ்கின்றது. துன்பம் தரத்தக்கவை யாவும் நோய் என்றே குறிப்பிட்டனர்.

நோயினைப் பிணி என்ற பெயராலும் வழங்கினர். 'பசி வந்திடில் பத்தும் பறந்துபோம்' என்பது பழமொழி. நோய்களில் எல்லாம் கொடிய நோயாகப் பசியே முதன்மையாக விளங்குகிறது. பசிப்பிணி மருத்துவன் என்ற பட்டத்தை ஒரு வள்ளல் பெற்றுள்ளான். இவ்வுண்மையைச் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்,

பசிப்பிணி மருத்துவ னில்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே (புறநானூறு - 173)

எனப் பாணர் கூற்றில் வைத்துச் சிறுகுடி கிழான் பண்ணனைப் பாராட்டியதினின்றும் அறியலாம்.

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேராதி யல்வது நாடு (குறள் - 374)

என்பது வள்ளுவர் வகுத்த இலக்கணமாகும். இவ்வாறு பல்வேறு விழுமியங்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன.

**நிறைவுரை**

தனக்கு எது தேவையோ அதுவே தருமம் என்று சொல்லப்படுகின்ற மனோபாவத்திற்கு வந்து விட்ட இன்றைய தமிழ்த் தலைமுறையினர் தங்களது மூதாதையர்களின் முற்போக்கான பாங்கினை மறந்து விட்டனர். காரணமின்றி முந்தையோர் அறக்கருத்துக்களை வழங்கியதன் தேவையை இன்றைய சூழலில் வாழ்கின்றவர்கள் தங்களது தனிமனித உள்ளத்தின் வழியாக நின்று சிந்திக்கும் பொழுது, தங்களது முன்னோர்களின் ஒவ்வொரு பதிவும் முக்கியமான விழுமியங்கள் என்பது புலப்படவே செய்யும்.

அறத்தினூ உங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறந்தனன் ஊங்கில்லை கேடு (குறள் - 3)

என வள்ளுவம் வழங்கும் அறம் எப்பொழுதும் எல்லாத் தலைமுறைக்கும் புரிந்து கொள்ளும் விதமாகவே படைக்கப்பட்டிருக்கிறது. அறங்கள் பற்றி நாம் சிந்தனை செய்கின்ற தருணங்களில் உள்மனக்கிடக்கையில் புதைந்திருக்கும் சுயநல தருமங்கள் உடைந்தே போகும். உள்ளமே கோயில் என்ற சொற்பதத்திற்கு மூல விதையான ஆரம்பத் தமிழனின் இன்றைய வாரிசுகளின் பாதைகளும் பயணம் செய்யும் தடங்களும் முறையான அறத்தின்வழி நிற்கவேண்டும்.

ஒரு சமூகத்தின் பின்புலம், அதன் கட்டமைப்பு, பழக்க வழக்கங்கள், பண்பாடு ஆகியவை தனி மனித வாழ்வியலை மையப்படுத்தியும், முன்னிறுத்தியும் சுற்றிச் சுழல்கின்றன. அதே சமயத்தில் தனி மனிதனின் ஒழுக்கம் தடம் மாறும்போது ஒட்டு மொத்தச் சமூகத்தின் வாழ்வியல் கேள்விக்குறியாகிறது.

வீரம், விருந்தோம்பல், பொதுவுடமை, கொடை, நீதி, நல்லொழுக்கம் போன்றவற்றினை உலகிற்கே எடுத்துச் சொன்னது தமிழ் இலக்கியம். வாழ்க்கை எப்படி வாழவேண்டும், எப்படி வாழக்கூடாது என்று வாழ்க்கைக்கே இலக்கணம் சொன்னவன், தமிழினைத் தவிர வேறு எந்த மொழியிலும் இல்லை. மனிதன் மனிதனாக வாழ மனிதனால் மனிதனுக்குச் சொன்ன பாடங்கள்தான் தமிழ்ச் சான்றோர் நமக்கு விட்டுச் சென்ற மிகப்பெரிய சொத்தான தமிழ்த்தாயின் மடியில் தவழும் தமிழ் இலக்கியங்கள். இன்றைக்கு இவை கடல் கடந்தும் வாழ்கின்றன என்றால் அவற்றுள் உள்ள வாழ்வியல் சித்தாந்தங்களும், சீரிய சிந்தனைகளுமே காரணங்களாகும். தனி மனித வாழ்வியலையும், ஒழுக்க நெறிகளையும் சமூகத்திற்கு விழுமியங்களாக அடையாளம் காட்டியது நம் இலக்கியங்கள்.

**துணைநூற்பட்டியல்**

சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு
தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.
புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971